# பல்லூடகங்களின் வழி தமிழ்க் கல்வி - பயன்களும், அவற்றிலுள்ள சிக்கல்களும்

ம.வெ.இராமச்சந்திரா
(mvrchandra@hotmail.com)

---

கட்டுரைச் சுருக்கம்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த தமிழானது கால வளர்ச்சியின் ஓட்டத்தோடு இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றையும் வளர்த்துக் கொண்டு வாழும் மூத்த மொழியாகத் திகழ்கின்றது. தமிழ் மொழியினைப் பொறுத்தவரை இந்திய மொழிகளிலேயே முதன் முறையாக அச்சுக்கலையில் அடியெடுத்து வைத்த மொழியாகும். கால ஓட்டத்திற்கேற்ப தம்மையும் செம்மைப் படுத்திக் கொண்டு வளர்ந்த மொழியாகும். உலகெங்கும் பரவியுள்ள தமிழர்களின் வழி புவி முழுவதும் உலா வரும் 'உயிருள்ள மொழி'யாகவும் திகழ்கிறது. மென்மேலும் இத் தமிழ் மொழி வளர, தோன்றிய இடமான இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சிங்கை மற்றும் பிற நாடுகளிலுள்ள தமிழறிஞர்கள் அயராது பாடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய சிறப்புகள் மிக்க தமிழ் மொழியினை மென்மேலும் வளர்க்கவும், இளைய சமுதாயத்தினரிடையே தமிழைக் கொண்டு செல்லவும், தமிழ் அழிந்து விடாது காக்கவும் ஊடகங்களின் உதவி மிக தேவைப் படுகிறது. தமிழ்க் கல்வியினை வளர்ப்பதில் ஊடகங்களின் பணி மிக முக்கியமான தேவையாகும். இன்றைய நவீன காலத்தில் பல்வகையான ஊடகங்கள் இதற்கு பேருதவி புரிகின்றன. அவ்வகையான ஊடகங்களில் அச்சு ஊடகம் (Print media), ஒலி வகையிலான ஊடகம் (Audio media), ஒலி, ஒளி வகையிலான ஊடகம் (Video media) மற்றும் கணினி மற்றும் இணையம் சார்ந்த ஊடகம் (Computer and Internet based media) ஆகியவை மிக முக்கியமான ஊடகங்களாகும்.

இவற்றின் வழி தமிழ்க் கல்வியைப் பரப்புவதின் சாத்தியக் கூறுகளும், அதனால் ஏற்படும் பயன்கள் பற்றியும், அவ்வாறு இவ்வகை ஊடகங்களைப் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல்களைப் பற்றியும் இக் கட்டுரை விரிவாக ஆய்கிறது.

அச்சு ஊடகமே இன்றும் தமிழ்க் கல்வியின் அடித்தளமாக விளங்குகிறது. உடனடித் தேவைகளுக்கும், எளிதான உபயோகத்திற்கும், குறைந்த விலையிலான பயன் பாட்டிற்கும், எளிதில் மாற்றி அமைப்பதற்கும், திருத்துவதற்கும், கால நேரம் சேமிக்கவும் தக்க ஊடகமாக விளங்குகிறது. ஆயினும் அச்சு ஊடகமானது பயில்வோருக்கும், கற்பிப்போருக்கும் இடையே குறைந்த நெருக்கத்தையே தரும். மேலும் கவரும் தன்மையிலும் குறைவுடையது. தன் முனைப்பும், சுய விருப்புக் கொண்ட சுறுசுறுப்பும் தேவையுடையது. படிப்பவரின் ஆற்றலைப் பொறுத்து அவரிடையே புரிந்தும் கொள்ளும் தன்மையை ஏற்படுத்தக் கூடியது.

ஒலி வகையிலான ஊடகம் தமிழ்க் கல்வியின் பயன்பாட்டில் மிகச் சிறிய அளவே பங்கு பெறுகிறது எனினும் ஒலி வகையில்லான தொடர்புகள் அமைத்து உரையாடுவது (Audio Conferencing) வெளிநாட்டவரிடையேயும் தமிழ் கற்பிக்க ஏதுவான வழியாகும். இவ்வகைத் தொடர்புகளை அமைப்பதும், பராமரிப்பதும் எளிதாகும். தொலைபேசி வழியிலேயும் எளிதில் இவ்வகைத் தொடர்புகளை அமைக்க இயலும். கற்பிப்போர், கற்போர் தங்கள் கருத்துக்களை

எளிதில் பரிமாறிக் கொள்ளலாம். ஆனால் இது சில சமயங்களில் அதிக செலவு பிடிக்கும் வகையில் அமைந்து விடுவதுண்டு. மேலும் இவ்வகையிலான உபகரணங்களைப் பற்றி பயன்படுத்துவோர் அறிதல் அவசியமாகிறது. இல்லையெனில் இது அதிக சிக்கலை ஏற்படுத்தக்கூடியதாகிவிடும். மேலும் இவ்வகையில் அனைத்தும் ஒலி வடிவிலேயே அமைவதால் கற்பிப்போரின் உண்மையான வெளிப்பாடு கிடைத்தல் கடினமாகிறது. அங்க அசைவுகள் மூலம் வெளிப்படும் செய்திகள், உச்சரிக்கும் விதம் ஆகியவற்றை இம்முறையின் மூலம் அறிய இயலாது.

ஒலி, ஒளி வகையிலான ஊடகமானது மிகுந்த பயன்பாடு கொண்டு விளங்கும் தன்மையுடைத்தது. அதிலும் குறிப்பாக தொலைக் காட்சியின் வழி தமிழ் கற்பிக்கப்படின் பலரும் பயன் பெறுவது திண்ணம். ஒலியின் வழி மட்டுமில்லாது காட்சிகளின் வழியாகவும் பாடங்களை விளக்க இயலும். கற்போரிடையே ஆர்வத்தைத் தூண்டும் ஊடகமாக இது விளங்குகிறது. ஒலி, ஒளி நாடாக்களின் வழி எந்த நேரமும் தமிழ் கற்கும் சாத்தியக் கூறுகள் அதிகம். கருத்துக்களை அறிமுகப் படுத்தவும், தொகுத்துச் சொல்லவும் ஏற்றதொரு ஊடகமாக இவ்வூடகம் விளங்குகிறது. ஆனாலும் ஒலி, ஒளி பரப்பிற்கான வகையில் தமிழ்க் கல்விப் பாடங்களை அமைப்பது மிகுந்த செலவு பிடிக்கும் செயலாகும். இதற்கு தகுந்த தொழில் நுட்பக் கலைஞர்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். மேலும் அதிக நாட்கள் தேவைப்படும். மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப் பட்ட பாடங்கள், திட்டமிடப்பட்ட முறையில், தேவையான தொழில் நுட்ப உபகரணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். பொதுவான வகையிலேதான் பாடங்கள் அமைக்கப் படுமேயன்றி தனிப்பட்டவரின் திறமையைப் பொறுத்து பாடங்கள் அமைக்க இயலாது. மேலும் கற்போர், கற்பிப்போர் இடையேயான தொடர்பானது சிறிதும் இருக்காது. கடித வழிப் போக்குவரத்தும் அதிக காலம் பிடிக்கும் மற்றும் முழு விவரங்களை அதன் வழி பெறவோ, அளிக்கவோ இயலாது. சரியான முறையில் தயாரிக்கப் படவில்லையெனில் பாடங்கள் புரியாமல் போய்விடும். அதுதவிர தயாரிக்கப் பட்ட பிறகு திருத்தப் படுவதோ, மாற்றப் படுவதோ அதிக செலவு பிடிப்பதோடு, கடினமான செயலுமாகும்.

கணினி மற்றும் இணையம் சார்ந்த ஊடகம் இன்றைய உலகின் முக்கியமான ஊடகமாக விளங்குகிறது. மற்ற எந்த ஊடகமும் கொண்டிராத சிறப்புகளைக் கொண்ட ஊடகமாகத் திகழ்கிறது. அதாவது மற்ற ஊடகங்கள் தனக்கென உரிய சிறப்புகளைக் கொண்டு விளங்குகிறது. ஆனால் கணினி மற்றும் இணையம் சார்ந்த ஊடகம் மற்ற அனைத்து ஊடகங்களின் சிறப்புத் தன்மையையும் கொண்டு விளங்குகிறது.

கணினி மற்றும் இணையம் சார்ந்த ஊடகம் தனியாக கற்றுக் கொள்ள சிறந்த ஊடகமாக விளங்குகிறது. அச்சு, ஒலி, ஒலிஒளி ஆகிய அனைத்து ஊடகங்களின் தன்மையையும் கலந்து பயன்படுத்த இயலும். முப்பரிமானங்களைக் கொண்டு விளக்க இயலும். கற்போர், கற்பிப்போர் உடன் உரையாட, செய்திகள் பரிமாற அனைத்து வசதிகளும் இதில் உண்டு. உலகம் முழுவதும் தொடர்பு கொள்வதும் மிக எளிது. ஆயினும் இத்தொடர்புகள் அதிக செலவு பிடிப்பவையாக உள்ளது. மேலும் கணினி வாங்குவதும் செலவு பிடிக்கக் கூடிய ஒன்றாகவே கருதப்படுகிறது. பயன்படுத்தக் கற்றுக் கொடுப்பதும் இன்றைய தேவைகளில் அத்தியாவசியமான ஒன்றாகும். மேலும் குறியீட்டுச் சிக்கலும், எழுத்துச் சிக்கலும் தமிழ் மொழிப் பயன்பாட்டில் உள்ள பெரிய சிக்கலாகவேக் கருதப்படுகிறது.

இன்றைய உலகில் நான்காம் தமிழான ‘கணினித் தமிழ்’, தமிழ் மொழியை என்றும் வாழும் மொழியாக மாற்றியுள்ளது. எதிர்கால சமுதாயத்தினரிடையே தமிழ் மொழி வளர வேண்டுமெனில் கணினித் தமிழின் வளர்ச்சி இன்றியமையாததாகும். எனவே தமிழ் மொழியை வளர வைக்கவும், உலகம் முழுவதையும் உள்ளங்கையில் வைக்கும் ஆற்றல் படைத்த இணையத்தில் தமிழ் மொழியானது தகுந்ததோர் இடத்தைப் பிடிக்கவும் கணினித் தமிழின்

பயன்பாடு உலகெங்கும் ஒரே மாதிரியாக அமைப்பது அவசியமாகும். இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுதல் இன்றைய காலகட்டத்தின் தலையாய பணியாகும்.